# காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை. ஜூலை. 22-

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு நேற்று (21.7.2025) பிறந்தநாள்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவை வலுப்படுத்துவதில் மல்லிகார்ஜுன கார்கே முக்கிய பங்கு வகிக்கிறார். பிரிவினையை விதைக்க முயலும் சக்திகளுக்கு எதிராக உறுதியாக நிற்கும் தலைவர்** என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

## சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூரில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் - அகில இந்திய மகளிர் கபடி போட்டி!

## அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன் - சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

சிவகங்கை. ஜூலை 22. சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஒன்றிய நகர திமுக மற்றும் சார்பு அணிகள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள், கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பிறந்த நாள், துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 6வது ஆண்டு அகில இந்திய அளவிலான மகளிர் பங்கேற்கும் மின்னொளி கபடி போட்டி 18,மதேதி முதல் 20 ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

இதில் தமிழகம் மற்றும் அரியானா, குஜராத், தென்னக ரயில்வே அணி, வடக்கு ரயில்வே அணி கேரளா, கர்நாடகா, பானிபட் சாய்குருபுதுதில்லி பாலம்அணி, கண்ணகி நகர் சென்னை, பாரதி திருநெல்வேலி, சாய்குஜராத் அணி உட்பட கில் இந்திய அளவிலான 27 அணி மகளிரணி வீரர்கள் பங்கேற்றார்கள்.

மூன்று தினங்கள் நடைபெற்ற போட்டியில் முதல் நாள் போட்டிகள் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில். அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார். நேற்று முன் தினம் இரவு 7மணிக்கு துவங்கிய போட்டிகள் நள்ளிரவு 12மணி வரை நடைபெற்றது.

இதில் சாய் ஒரு குஜராத் அணி முதல் இடத்தையும். இரண்டாவது இடத்தை புதுடெல்லி பாலம் ஸ்போர்ட்ஸ்னையும் மூன்றாம் இடத்தை அரியானா குருக்கல் அணியும் நான்காவது சென்னை கண்ணகி நகர் அணியும் பெற்றார்கள். இதில் முதல் இடம் பெற்ற குஜராத் சாய் குரு அணிக்கு ரூபாய் 2 லட்சம் ரொக்கமும் கோப்பையும் ஒரு கிராம் தங்க நாணயம் இரண்டாவது இடத்தைப் பெற்ற புதுடெல்லி பாலம் அணிக்கு ஒன்றரை லட்சமும் மூன்றாம் இடத்தைப் பெற்ற அரியானா குருக்கல் அணிக்கு ஒரு லட்சமும் நான்காவது இடத்தை பெற்ற கண்ணகி அணிக்கு ரூபாய் 75 ஆயிரத்தையும் கேடயத்தையும் கே.ஆர். பெரிய கருப்பன் வழங்கி பாராட்டினார் இந்த. மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ, மாவட்ட கழக அமைத்தலைவர் வழக்கறிஞராக கணேசன்,

மாவட்ட இளைஞர் அணிப்பாளர் நாகினி செந்தில்குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மாணவரணி ராஜ்குமார், வர்த்தக அணி ருக்மா சரவணன், அணி நிர்வாகிகள் பாலா, வைகா சோமு பிள்ளையார்பட்டி சதீஷ், தமிழ் நம்பி, சன்சீமான் சுப்பையா,

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலர் ராணி நாராயணன், ஒன்றிய கழக செயலாளர்எஸ்.சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், பேரூர்கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், நிர்வாகிகள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கான்முகமது, எஸ்.முத்து குமார், இளைஞரணி மனோகரன்,

பொருளாளர் ஆர்.எம். கண்ணன், மற்றும் மாவட்டம் முழுவதிலுமிருந்து ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். போட்டிக்கான ஏற்பாடுகளை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் மெ.காளிமுத்து, தலைமையில் திருப்பத்தூர் ஒன்றிய நகர, பேரூர், கழக செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் செய்திருந்தனர்.

முன்னதாக அனைத்து கபடி விளையாட்டு வீரர்கள் அண்ணா சிலையில் இருந்து ஊர்வலமாக நகரின் முக்கியவீதிகள் வழியாக ஊர்வலமாக விளையாட்டுதிடலிற்கு அழைத்து வரப்பட்டனர் . அவர்களுக்கு வாண வேடிக்கைகள், மேள தாளங்களுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# சிதிலமடைந்த 100 திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, ஜூலை 22- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் சிதிலமடைந்த நிலையில் உள்ள 300 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 100 திருக்கோயில்களுக்கு குட முழுக்கு நடத்தப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளை நிறைவேற்றி வருவதோடு, கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில் களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவுக ளுக்கான அரசு மானியத்தை ஆண்டுதோறும் உயர்த்தி வழங்கியும், அத்திருக்கோயில்களை புனரமைக்கும் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத 490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக கடந்த ஆட்சியில் 3 கோடி ரூபாயாக வழங்கப்பட்டு வந்த அரசு மானியத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 2022 ஆம் நிதியாண்டில் 6 கோடி ரூபாயாகவும், 2023-2024 ஆம் நிதியாண்டில் 8 கோடி ரூபாயாகவும், 2024—2025-ஆம் நிதியாண்டில் 13 கோடி ரூபாயாகவும் உயர்த்தி அதற்கான காசசோலைகளை வழங்கினார்கள். 2025 -2026 ஆம் நிதியாண்டிற்கு அரசு மானியம் 13 கோடி ரூபாயிலிருந்து 18 கோடி ரூபாயாகவும் உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2022-2023ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக்கோரிக்கையில், “கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களில் சிதிலமடைந்த நிலையில் உள்ள 100 திருக்கோயில் களின் திருப்பணிகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்“எனவும், 2023-2024-ஆம் நிதியாண்டில் “இவ்வாண்டு மேலும் 100 திருக்கோயில்களுக்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் திருப்பணி கள் மேற்கொள்ளப்படும்“ எனவும், 2024-2025-ஆம் நிதியாண்டில் “கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களில்50 திருக்கோயில்களுக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் திருப் பணிகள் மேற்கொள்ளப்படும்“ என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத் திருக் கோயில்களின் திருப்பணிக ளுக்கு நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி உடனுக்குடன் வழங்கப்பட்டு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 2022-2023-ஆம் நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 100 திருக்கோயில்களில் 77 திருக்கோயில்களுக்கும், 2023-2024-ஆம் நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 100 திருக்கோயில்களில் 21 திருக்கோயில்க ளுக்கும், 2024-2025-ஆம் நிதி யாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 50 திருக்கோயில்களில்2 திருக்கோயில்களுக்கும் என மொத்தம் 100 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு வெகு விமரிசையாக நடத்தப்பட்டுள்ளன. இதர திருக்கோயில்களின் திருப்பணி நடைபெற்று வருகின்றன.

இதுமட்டுமல்லாமல் கடந்த நான்காண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 418 ஆண்டுகளுக்கு பின் திருவட்டாறு, ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், மண்டைக்காடு பகவதியம்மன் திருக்கோயில், திருவிதாங்கோடு மகாதேவர் திருக்கோயில், தாமரைக்குளம் ஆபத்துக்காத்த கண்டன் சாஸ்தா திருக்கோயில் உள்ளிட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, திருக்குளங்களும், திருத்தேரும் சீரமைக்கப்பட்டுள்ளன.

மேலும், 2025-2026-ஆம் நிதியாண்டிற்கான சட்ட மன்ற அறிவிப்பில் “சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களில் 50 திருக்கோயில்க ளுக்கு ரூ. 8 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்” என அறிவிக்கப்பட்டு, அதற்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.




அன்பில் அறக்கட்டளையின் சார்பாக திருவெறும்பூர் முக்குலத்தோர் மேல்நிலைப் பள்ளியில் வேலைவாய்ப்பு முகாமானது நடைபெற்றது. இந்த முகாமில் சுமார் 120 க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. மேலும் இந்த முகாமில் சுமார் 3000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். இந்நிலையில் முகாமில் சிறப்பு விருந்தினராக திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (21.7.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் தயாரிக்கப்பட்ட 2025–26 ஆம் ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறை அரசுச் செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நிதித்துறை இணைச் செயலாளர் பிரதீக் தயாள் நிதித்துறை துணைச் செயலாளர் சி.ஏ. ரிஷப் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ச.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை தலைமை இயக்குநர் ஆர்.செல்வதுரை மற்றும் நெடுஞ்சாலைத்துறை/ பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் உள்ள

# பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில் செந்தர விலைப் பட்டியல்!

## அமைச்சர் எ.வ.வேலு வெளியிட்டார்!

சென்னை, ஜூலை.22- பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (21.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் தயாரிக்கப்பட்ட 2025-26 ஆம் ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியலினை வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில், 2025-26ஆம் ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட செந்தர விலைப்பட்டியல் குழு அமைக்க 14.3.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

- முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
- முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து.,
- முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை
- முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர், வனத் துறை
- நிதித்துறையை சார்ந்த உறுப்பினர்
- பொறியியல் இயக்குநர்,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
- பொறியியல் இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம்
- தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை
- தலைமைப் பொறியாளர், நீ.வ.து., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்
- தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம்
- தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பல்வேறு மட்டத்தில் கட்டுமான பொருட்கள், மற்றும் இதர இனங்களின் விலைகள் குறித்து பல்வேறு தரவுகளின் அடிப்படையில் விவாதித்து விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இது 3 தொகுதிகளாக தயாரிக்கப்பட்டுள்ளது.

தொகுதி 1: பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வளத்துறை

தொகுதி 2 : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை.

தொகுதி 3 : வனத்துறை, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் இந்த செந்தர விலைப் பட்டியலை அரசுத் துறைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறை அரசுச் செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நிதித்துறை இணைச் செயலாளர் பிரதீக் தயாள், நிதித்துறை துணைச் செயலாளர் சி.ஏ. ரிஷப் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ச.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை தலைமை இயக்குநர் ஆர். செல்வதுரை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் பல்வேறு நலத்திட்ட உதவிகளால்

# விவசாயிகளின் காவலனாகப் போற்றப்பட்டு வருகிறார்!

## சேலத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம், ஜூலை. 22– முதலமைச்சர் அவர்கள் கால்நடை வளர்ப்போரின் நலனை பாதுகாக்கவும். வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 50 சதவீத மானியத்தில் புல் நறுக்கும் கருவிகளை நேற்று வழங்கி தகவல் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் மின்விசையில் இயங்கும் புல்நறுக்கும் கருவிகளை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (21.07.2025) சேலம் ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறையும் வளர்ச்சி அடைந்து தன்னிறைவு பெற வேண்டும் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கால்நடை வளர்ப்போரின் நலனை பாதுகாக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்துள்ளார்கள்.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 16 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 14 கால்நடை பெரு மருத்துவமனைகள், 152 கால்நடை மருத்துவமனைகள், 2,741 கால்நடை மருந்தகங்கள், 56 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 815 கால்நடை கிளை நிலையங்கள் மூலமாக பல்வேறு நலத் திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் (NADP) கீழ் ரூ.75.83 இலட்சத்தில் 100 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஏழ்மை நிலையில் உள்ள 2,000 பயனாளிகளுக்கு ரூ.3.82 கோடி மதிப்பீட்டில் 100% மானியத்தில் தலா 5 வெள்ளாடு, செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டுக்கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புற பயனாளிகளுக்கு நாட்டுக் கோழி பண்ணை நிறுவ 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று 110 ஏக்கரில் ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் மாநில தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் 50% மானியத்தில் 400 பயனாளிகளுக்கு புல் நறுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற பெண்களுக்கு நாட்டின கோழிக்குஞ்சுகள் (40 கோழிக் குஞ்சுகள் வீதம்) 50% மானியத்தில் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் 350 பயனாளிகளுக்கு தலா ரூ.35,000 மதிப்பில் கறவை மாடு வழங்க திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட பசுந்தீவனங்கள் கால்நடைகளுக்கு அப்படியே வழங்கினால் முழுமையான பலன் கிடைக்காது என்பதன் அடிப்படையில் அதனை சிறு சிறு துண்டுகளாக வெட்டி வழங்கும்பட்சத்தில் எளிதில் ஜீரணம் அடைந்து கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் உற்பத்தி திறன் பெருகும். இதனால் கால்நடை வளர்ப்போர் பயனடைவார்கள். இதற்காக சேலம் மாவட்டத்தில் இன்றைய தினம் 2024–2025 ஆம் நிதியாண்டில் 210 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.60.91 இலட்சம் மதிப்பீட்டில் மின் விசையால் இயங்கும் புல் நறுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் காவலனாக இது போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களின் வாயிலாக பயனடைந்த பயனாளிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. அர.பிரகாசம், துணை இயக்குநர் மரு.தமிழரசு, உதவி இயக்குநர் மரு.ரகுபதி, மாமன்ற உறுப்பினர் திருமதி.கிரிஜா குமரேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் மின் விசையில் இயங்கும் புல்நறுக்கும் கருவிகளை பயனாளிகளுக்கு நேற்று (21.07.2025) சேலம் ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார் . உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.அர.பிரகாசம், மாமன்ற உறுப்பினர் திருமதி.கிரிஜா குமரேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.